நாள்: 25.06.2026
EP .89/2025
பெயர் சுருளிமுத்து
ம.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

எதிர்மனுதாரர்களை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். அவர் வட்டிக்கு விடும் தொழில் செய்து வருகிறார் என்று என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அவர் 10 லட்சம் யார் யாருக்கு கொடுத்துள்ளார் என்பதை குறிப்பிட்டு சொல்ல இயலாது. அவர் தனியாக பைனான்ஸ் அலுவலகம் எதுவும் வைத்திருக்கவில்லை. எனக்கும், என் சகோதரர் பரமனுக்கும், பாத்தியப்பட்ட சொத்தை எதிர்மனுதாரர் மற்றும் அவர் மனைவி பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தில் எதிர்மனுதாரர் தான் விவசாயம் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு சின்னமனூர், சீப்பாலக்கோட்டை ரோட்டில் ஒரு சொந்தமான முதல் மாடியுடன் கூடிய வீடு உள்ளது என்றால் சரிதான். நான், எதிர்மனுதாரருக்கு அசையா சொத்து இருப்பதை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் என் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.25 17:36:57 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்